# என்ர அப்பு என்ர அம்மா

## கவிதைகள்



சோ. தேவராஜா

# என்ர அப்பு
# என்ர அம்மா

கவிதைகள்

சோ. தேவராஜா

கலாலயம் பதிப்பகம்
இல. 68, நீதிமன்ற வீதி,
மல்லாகம்

| | |
|---|---|
| Book Tittie: | Enta Appu Enta Amma |
| subjust : | Collection of Poems |
| Author: | S. Thevarajah |
| Pupilsh by : | KALA LAYAM PATHIPPAGAM<br>No. 68, Court Road,<br>Mallakam, Srilanka |
| Puolished No: | 10 |
| Pages : | vi+ 42 |
| Size : | semy |
| First edition : | November, 2023 |
| Cover Design : | S.T.Anujan |
| Price : | 300/= |
| Printed by : | J.S.Printers<br>Sillalai Road,<br>Pandatheruppu |
| I S B N - | 978-624-93177-3-4 |

| | |
|---|---|
| நூல் பெயர்: | என்ர அப்பு, என்ர அம்மா |
| பொருள் : | கவிதைகள் |
| நூலாசிரியர்: | சோ. தேவராஜா |
| வெளியீடு : | கலா லயம் பதிப்பகம்<br>இல. 68, நீதிமன்ற வீதி,<br>மல்லாகம், இலங்கை |
| வெளியீட்டு இல: | 10 |
| பக்கங்கள் : | vi + 42 |
| நூலின் அளவு : | செமி |
| பதிப்பாண்டு : | நொவம்பர், 2023 |
| அட்டை வடிவமைப்பு : | எஸ். ரி. அனுஜன் |
| விலை : | 300/= |
| அச்சகம் : | ஜே. எஸ். பிறின்றேஸ்,<br>சில்லாலை வீதி,<br>பண்டத்தரிப்பு |



# சமர்ப்பணம்

***அப்பு வல்லிபுரம் சோமசுந்தரம் (சோமு)***
***அம்மா சற்குணம் சோமசுந்தரம் (குணதங்கம்)***

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | பூமி சூரியனாய்... | 01 |
| 2. | வெற்றி நமதே | 03 |
| 3. | தெளிவே தெய்வம் | 05 |
| 4. | நேரமில்லை எனும் வரம் வேணும் | 07 |
| 5. | பிள்ளை யார்! | 08 |
| 6. | அம்மா | 10 |
| 7. | உச்சி மீது | 12 |
| 8. | தாங்குமோ இத்தரணி | 14 |
| 9. | அப்பு | 16 |
| 10. | சிரி லங்கா | 18 |
| 11. | இழப்பு | 20 |
| 12. | மரங்களின் கனி: சங்கர் | 21 |
| 13. | மறப்பாவும் மறதிப்பாவும் | 23 |
| 14. | நானும் பொம்மை நீயும் பொம்மை | 24 |
| 15. | உலகப்பாவும் அரசியல்பாவும் | 25 |
| 16. | வாழ்வின் சாரம் | 26 |
| 17. | என்.ஜி.ஓப் பெம்மானே! | 27 |
| 18. | வோட்டும் வீடும் | 28 |
| 19. | கரங்கள் உயரும் | 29 |
| 20. | ஆளுமை | 30 |
| 21. | விழிப்பே எங்கள் உலகு | 31 |
| 22. | மறுபடி | 32 |
| 23. | அம்மா -2 | 33 |
| 24. | பூமாதேவியே தாயே!!! | 35 |
| 25. | ஒழுங்கு | 36 |
| 26. | விண்ணில் பறப்போம் | 37 |
| 27. | எழுந்துவா | 38 |
| 28. | வாழ்வதே எம் கனவு | 39 |
| 29. | மனிசர் எங்கே! | 40 |
| 30. | பூவே பூவிழுந்தாயோ | 41 |
| 31. | விடுதலை ஏன்! | 42 |

# பதிப்புரை

*கவிஞர் சோ. தேவராஜா 1995 முதல் எழுதிய தனிக்கவிதைகளும் ஏழு பாடல்களும் இத்தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.*

*ஏற்கனவே 2001-இல் இவரது 'ஆச்சி' என்ற தொகுப்பு வெளிவந்துள்ளது. அதில் 1970க்குப் பின்னர் எழுதிய தனிக் கவிதைகளும் சில கவியரங்கக் கவிதைகளும் இடம்பெற்றன.*

*அதன் பின்னர் நடந்த கவியரங்கக் கவிதைகளை தற்போது தொகுத்து இருநூல்களாக 'கூவிப் பிதற்றலன்றி' , 'நிற்க அதற்குத் தக' என இரு நூல்களையும் வெளியிட்டுள்ளோம்.*

*இவரது கவிதைகள் தேசிய கலை இலக்கியப் பேரவையின் தாயகம், புதியபூமி, புதுவசந்தம் ஆகியவற்றில் செண்பகன், ஈழத்துத் தேவன் பூதனார் என்ற புனை பெயர்களில் வெளிவந்துள்ளன.*

*வாசகர்கள் தரும் ஆதரவைக் கணிப்பெடுத்து இவரது ஏனைய பிற கவிதைகளையும், நாடகங்களையும், கட்டுரைகளையும் நூலாக வெளியிட 'கலா லயம்' தீர்மானித்துள்ளதெனத் தெரிவிக்கின்றோம்.*

*வாசகர்களின் விமர்சனங்களை வரவேற்கிறோம்.*

*பாவலர் அழ. பகீரதன்*
*2023.11.02*

*கலா லயம்*
*68, நீதிமன்ற வீதி,*
*மல்லாகம்*
*021 224 3988*

# என்னுரை

இந்நூலில் இடம்பெறும் கவிதைகளைப் பிரசுரித்த தாயகம், புதியபூமி, புது வசந்தம் ஆகிய சஞ்சிகைகளும் பத்திரிகை, ஆண்டுமலர் ஆசிரியர் குழுவுக்கு நன்றி பகிர்கிறேன்.

இக்கவிதைகளைக் கண்டெடுத்து தொகுத்து இந்நூலை பதிப்பித்து வெளியிடும் பாவலர் அழ. பகீரதனுக்கும் எனது நன்றி.

இந்நூலுக்கு அட்டைப்படம் வரைந்த எஸ். ரி, அனுஜன், அச்சகர் லிகான், புத்தகப் பண்பாட்டுப் பேரவை, தேசிய கலை இலக்கியப் பேரவை தோழர்கள், நண்பர்களுக்கும் குறிப்பாக தோழர் சி.கா. செந்திவேல், தாயகம் ஆசிரியர் க. தணிகாசலம், ச. சஜீலன், ச. தனுஜன், ச. அனுஜன், பா, கஜீபா, சு. கர்ணிகா, அச்சகர் லிஹான் ஆகியோருக்கு உளப்பூர்வமான நன்றிகள்.

இந்நூலை எனது பெற்றோராகிய தந்தையாருக்கும் தாயாருக்கும் அர்ப்பணிக்கின்றேன்.

*2023.01.02* — *நன்றி*

*அரசடி வீதி,* — *சோ. தேவராஜா*

*பண்டத்தரிப்பு*

*T.P: 077-8851989*

*Mail: sothevarajah@gmail.com*

/

# பூமி சூரியனாய்...

*புராணச் சேதிகள் போயடங்கிப்போனபின்*
*இந்நாளிலும் 1990-களிலும்*

*எங்கள் பாற்கடலிலும்*
*அமிர்தம் கடையப்படுகிறது*

*பேரினப் பெருவெறியர் அசுரராய் ஆனமுதல்*
*எங்கள் பெருமக்கள்- ஆண்ட பரம்பரையார்*
*தங்களைத் தாமே தியாகிகளாய்*
*தேவர்களாய் ஆக்கிக்கொண்ட அகாலம் முதல்*
*மண்ணை மத்தாக்கி*
*மக்களைக் கயிறாக்கி*
*சாகா வரம் தாம் வேண்டி*
*அமிர்தம் திண்டு விழுங்க;*
*முறுக்கேறிய தோள்களோடு*
*முழிகள் அனல் கக்க*
*கொழுத்தும் வெய்யிலிலும்*
*பேயுலவும் நட்டநடுச் சாமத்திலும்*
*ஏவுகணை, ஷெல், எறிகுண்டு ஏந்திய கைகளால்*
*தேவரும் அசுரரும்*
*ஒன்றாய் அமிர்தம் கடைந்தனர்*

*தேவரும் அசுரரும்*
*நோக்கமே ஒன்றாய்*
*ஒவ்வொரு பக்கமாய்;*
*கயிற்றின் கால்களை*
*கரங்களால் நெருக்கி இறுக்கிப் பிடுங்கியே பிடித்தபடி*
*கால்களை அகட்டி கர்வமாய் நின்றனர் சூரர் ஒருபக்கமாய்*
*கழுத்திலே கைபிணைத்து தேவர்கள் ஒன்றாய் கோர்த்து*
*மறுபக்கமாய் நின்றும் கயிற்றை*
*விறுவிறுப்பாய் விழுத்தியே தேய்த்தனர்*
*பெருவிருப்பும் அன்பும் புனிதமாய் கொப்புளிக்க*

*முன்னே யிழுத்தனர் தேவர்*
*பின்னே யிழுத்தனர் சூரர்*
*கோபமாய் முறைத்தனர்;*
*கொண்ட கொள்கையில் பற்றுடன்*
*வேகமாய் இழுத்தனர்*
*முன்னே யிழுத்தனர் பின்னே யிழுத்தனர்*
*முன்னும் பின்னும் மாறி மாறி*

*ஓடியும் கூடியும் ஆடியும் பாடியும்*
*ஆள் மாறி மாறி தாறுமாறாயிழுத்தனர்*
*வீழ்ந்தவர் மாவீரரானார்*
*தேசிய நாமங்கள் பெற்றனர்*

*வேதனையால்*
*மானுடர் கக்கிய நஞ்சு- என்*
*தேசக் கடலை விழுங்கியது*
*நீலகண்டன் காணாமல் போயினன்*
*தேவரும் சூரரும் செத்தே போயினர்*

*நீலக் கடல் அலை நெருப்பாய் கொப்பளித்து*
*நிலமெங்கும் நெருப்பலை மேவிப்பாய்ந்தது*
*ஈழத்தின் மலை முகடு எரி மலையாய் சீறியது*
*சூறாவளி புயலாகி*
*பூமியே சூரியனாய், சூரியனாய்*
*சூரியனாய் சுளன்றதுவோ?*

*2*

# வெற்றி நமதே

*மலைமண் என் மண்*
*நான் பிறந்த மண்- விளையாடிப்*
*பிரண்ட மண்*
*ஓடியாடி உருண்டமண்*
*உழைத்த மண்- என்*
*தோட்டமண் தேயிலை மண்*
*நான் வளர்ந்த மண் நான் வாழும் மண்*
*நான் புதையும் மண்- புதைந்தபின்*
*மண்ணாகி மண்ணாகும் மண்*

*கும்பனியார் கொணர்ந்த மண்ணல்ல- நாம்*
*துரும்பாகித் தூசாகி புண்ணாகி வெந்தமண்*
*இரும்பாகி எம்கரம் கண்ணாகிக் காத்தமண்*
*அரும்பாகி மரமாகி விண்ணோக்கி வளர்ந்த மண்*
*நான் புதையும் மண்- புதைந்தபின்*
*மண்ணாகி மண்ணாகும் மண்*

*துரையும் பங்களாவும் உயர இருக்குது*
*விரைவில் உருளும் காலம் கனியுது*

*நூற்றாண்டுகள் மேலாய் நாமுழைத்து*
*ஆற்றாது அழுத கண்ணீர் பாயுது பாயுது*
*ஊற்றாகி ஆறாகிப் பெருநதியாகி*
*வற்றாத பெருவெள்ளத் தேக்கமாகி*
*காற்றாகி மின்சக்தி நெருப்பாகி*
*கூற்றாகி கும்பனியார் குடல் பிடுங்கி*
*நாற்றாகி நம்முழைப்புச் சக்தி பெருங்காளியாகி*
*மாற்றாகித் தொழிலாளர் பக்தி தரும் ஊழியாகி*
*வீற்றிருப்பாள் எங்கள் தாய்- மக்கள்*
*முடிசூடி மலர்ந்திருப்பாள் மலைமுகட்டில்*

*வானத்து மேலோர் கீழிறங்கி வந்து- எங்கள்*
*வாசல் கதவுகள் தட்டுவார் தம் தாள் பணிந்து*
*வணங்குவர், வாழ்த்துவர்*
*எழுக எம் மலை மாதா, எழுக எழுகவே!*

*வானத்துச் சூரியனாய் வான் பிளக்க நாமெழுவோம்*
*ஊனமுற்ற மானுடத்தின் மானம் பெருகவென நாமெழுவோம்*
*மலை முகில், முலை உறிஞ்சி வழியும்*
*பானமருந்தி சூரியக் கதிர் கயிறாக்கி*
*கூனற் பிறை நட்சத்திரக் கூட்டத்தை*
*ஏணைக் கொடியாக்கி பிரபஞ்ச வெளியெங்கும் நாம் படர்வோம்*

*ஆர் வருவார் எமைத்தடுக்க, தொழிலாளர்*
*பார் முழுதும் வேராகி விழுதாகி*
*ஊராகி உறவாகி கும்பனியார்*
*நீறாகிப் போக எங்கள் மலைமண்ணில்*
*காலூன்றி நிற்போம்- நம்*
*தலை நிமிர்த்தி.*

❍

3

# தெளிவே தெய்வம்

*`தெய்வம் இகழேல்` என்று ஔவை பாடினள்*
*உய்யும் வழிதேடி ஓர் ஆத்திசூடி*
*மெய்யாய் இறைவன் வெளியில் இல்லை*
*பொய்யாய் புனை கதையாய் புளுகாய் பல சொல்லி*
*கையும் மெய்யுமாய் கடவுளைப் பிடித்து*
*கண்டபடி ஏசி காதை முறுக்கி நறுக்கி*
*என் உள்ளத்திலிருந்து கழுத்தைத் திருகிக் கல்லாக்கிச்*
*சவமாக்கி கல்லறை கட்டியென் கடவுளைச்*
*சிறைப்பிடித்து சங்கிலிக் கதவு போட்டுப் பூட்டிச்*
*சமஸ்கிருத மொழியில் காது கிழியக்கத்தி*
*ஸ்பீக்கரில் குளறி கோபுரங்கள் உயர்த்தி- ஐயோ*
*என் கடவுளைக் கைது செய்து*
*`காணாமல் போனோர்` பட்டியலிலும் தேடிக்களைத்து*
*சிறையிலுள்ள என் சீமான் கடவுளை*
*விரைந்து மீட்டுத் தரும்படி என் காந்தித் தாத்தாவைக் கேட்டேன்*
*உறைந்து போனார் செய்தி கேட்டு*

*`என்னைக் கொன்ற கோட் சேக்கு, கோயில் கட்டுதடா பாரதம்*
*உண்ணாணை என்னை விடு, ஊரைக் கூப்பிடாதை*
*`பிசாசின் ஒவ்வீசேஸ்தான் கோயில் ஜெயில் காட்மார்*
*ஆணவமாய் மும்மலநோய் முற்றி சிரசிலடித்து*
*ஆளுக்கொரு ஆலயமாய் ஊரெல்லாம் கோபுரமாய்*
*மீளும் வழியின்றி மினக்கெட்டு மாளுகிறார்*
*`யாழ்ப்பாணத்தார்` என்று சொல்லி அகன்றார் காந்தி*

*`உன் உள்ளத்துள்ளிருக்கும் தெய்வத்தைப் பிடித்து*
*இழுத்து விழுத்தி கோயிலெனுங் கொடுஞ்சிறைக்குள்*
*சேடமிழுக்கும் மென் தெய்வத்தை மீள் தம்பி`*
*என்று என் முறுக்கு மீசைப் பேரன் பாரதி*
*கெஞ்சினான் என் பாதம் பணிந்து*

*`தெய்வம் நீ என்றுணர்` என்று தன் புதிய*
*ஆத்திசூடியின் புரிதலை விளக்கினான்*
*எனக்கு நானே இறைவன்*
*எனக்குள் உறையும் இறையே தெய்வம்*

*கடவுள் எனக்கு வெளியே இல்லை*
*`உள்ளக் கமலத்துள் உறையும் என் இறையே*
*நானே கடவுள் நானே தலைவன்*
*எனக்கு நானே மன்னன்*
*எனை நானே ஆளுகிறேன்*
*எனை ஆள எவனும் வெளியில் இல்லை*

*சாத்தான்களும் சூரர்களும் இரணியரும்*
*இளித்தபடி கை கோர்த்து மாறு வேசம் பூண்டு*
*தாறுமாறாய் மோட்டுச்சைக்கிள் ஏறி*
*மோடியரசோடு கூடி இந்துத்துவா என்றும்*
*இந்தி மொழி பேசி*
*ஆர். எஸ். எஸ் அவதாரமாய் அனுமனாய்*
*இராமனாய் இலங்கை வருகிறார் குரங்கோடு கூடி*

*முருகையன் எனும் முனிவனை முந்தநாள்*
*பனை வெளியில் கண்டேன் தனியனாய்*
*சிணுங்கிச் சிணுங்கி அழுதபடி கண் கசக்கி நின்றார்*
*`என் அப்பனே என் ஐயனே என்ன முருகைய`*
*என்றேன் வெல வெலத்துப் போனார்*

*"ஔவைக்கும் பாரதிக்கும் அப்பால் சென்றேன்*
*`எழுபத்தாறு` என்றொரு புத்தம் புது*
*ஆத்திசூடி விளக்கமேன் எழுதினாய்" என்று*
*ஏத்தி எனை கழுமரத்திழுத்து மோடியும்*
*மோடருமாய் வதைத்தனர் உதைத்தனர்*
*"`தெளிவே தெய்வம்` என்ற மந்திரத்தையேன்*
*தமிழருக்குச் சொன்னாய்" என்று என்*
*காதைப் பொத்தி விட்டனர் அறை*
*சமூக விஞ்ஞான அறிவே தெளிவு- அத்*
*தெளிவே தெய்வம் எனும் மந்திரத்தை*
*இரகசியமாய் மூச்சு விடாமல் சொல்லி*
*சைவத் தீட்சை கொடு அப்பனே` எனச் சொல்லி*
*மறைந்தார் முருகைய முனி*

*தாயகம் ஏப்ரல்-யூன் 2015*

❍

*4*

# நேரமில்லை எனும் வரம் வேணும்

*காசு வேணும்*
*இருபத்தி நாலு மணி தாண்டி*
*இருபத்தைந்தாவது மணி தேடிப் பறக்க வேணும்*
*காசுள்ள பெரிய மனிசர் பிரியம் வேணும்*
*பேருள்ள பெருமாக்களின் உறவுகள்*
*எனைத்தேடி வரவேணும்*
*சில்லறை மனிசரின் சீவியம் சகியாது துலையவேணும்*
*ஓடவேணும்*
*ஓரிடத்தில் இருக்காமல் ஒளியவேணும்*
*ஆற்றை கண்ணிலையும் அம்பிடாக் கடவுளாய்*
*நான் ஆகவேணும்*

*எல்லாம் எனக்கு வேணும் உலகத்தில்*
*இல்லாத பொருளெல்லாம் நான் கொள்ளவேணும்*

*வேணும் வேணும் வேணும்*
*வேணுமெனும் மந்திரமே*
*எனைச் சூழப் பெருகவேணும்*
*ஆருமெனைக் கண்டு`*
*ஆரடா இவன்` எண்டு மலைக்கவேணும்*
*பக்கத்து வீட்டுப் பாடுகளைக் கேடுகளைப் பாக்கப்படாது*
*சனங்களோடு சம்பாஷித்தல் பாவமாகவேணும்*
*எவருடனும் பேசாது எவரையும் காணாது*
*எவற்றை கதையும் கேளாது சீவிக்கும் வரம் வேணும்*
*நீ கூப்பிட்டால் கேளாது வந்தாலும் தெரியாது*
*பார்த்தாலும் புரியாது எனும் பரமநிலை நான்*
*எய்தல் வேணும்*

*`நேரமில்லை` என்று சொல்வதே*
*என் நேரமாக வேணும்*
*எல்லாம் உலகமயம் எனும் தாய் பெற்ற பிள்ளை நான்*
*இப்போதைக்கு எனக்கு நேரமில்லை.*

*புது வசந்தம் 2014*

❍

5

# பிள்ளை யார்!

*அயோத்தியை ஆண்ட இராமனுக்கு*
*குந்துவதற்கு குடில் இல்லை!*
*கோயில் மீண்டும் கட்டுவதற்கு*
*இந்துத்துவாக்கள் மசூதியைத்தாம் இடிப்பார்*
*இந்திய மக்களெல்லாம்*
*பாய் விரித்துப் படுப்பதற்கு- மண்*
*குந்துகள் தானுமில்லை!*

*`ஆர் பெற்ற பிள்ளையோ*
*பிணமானான்!*
*எந்த அன்னையின் தனிமகளோ*
*சவமானாள்*
*ஆர் பெற்ற பிள்ளையோ ஆர்பெற்ற பிள்ளையோ!*
*ஆர் பெற்ற பிள்ளையோ?*

*முருகையன் கவி செய்த பாடலென்*
*மூளையை உறுத்த என்பிள்ளை*
*அருகில் இல்லையென்று ஆலாய்த்*
*தெருவெல்லாம் திரிகின்றேன்!*

*என் பிள்ளை எங்குற்றான்*
*என்றேங்கித்*
*தன்பிள்ளை தான் தேடத்*
*தெருவெல்லாம் திரிகின்றேன்*

*உன் பிள்ளை யார் என்று*
*உறுக்குவார் சிலர்!*
*இங்கெவரும் இல்லையென்பார்*
*பிடிக்கவில்லையென்பார்- பிடித்ததைப் பார்த்திருந்தால்*
*அப்போதே விட்டுவிட்டோமென்பார்!*
*காணாமல் போனோர் பட்டியலைப் பார் என்பார்!*
*விரும்பி வந்தான் போராடச் சேர்த்துவிட்டோம் போவென்று*
*அரும்பு மீசை முளைக்காதார்*
*படலையைச் சாத்தென்பார்*

*புதையல் எடுக்கப் பூதமொன்றுக்குப் பலியாக்க*
*பிள்ளைகள் பிடிப்பாரென்றறிந்தேன் அந்நாளில்!*
*கதையிது தொடராக காலமிது முடிவாக*
*பிள்ளையைப் பெற்றவள் தேடுகிறேன்*
*தடவுகிறேன் ஓடுகிறேன் வாடுகிறேன்*
*பாரெல்லாம் கேட்கத்தான்.*

*அரசடி ஆலடி புளியடி வேம்படியெனத்*
*தெருவெல்லாம் பிள்ளை பால்பருகப் பலரும்*
*பார்த்திருக்கும் சேதிசொன்னார்!*
*வேர்த்து விறுக்க மரத்தடியெல்லாம் பாய்ந்தேன்*
*ஆருக்குந் தெரியாமல் கல்லாய் கிடந்தான் என்பிள்ளை! தெருவெல்லாம்!*

*கந்தர் மடத்தில் என்பிள்ளை*
*முப்பதாண்டுகள் முன்னே தென்னம்பிள்ளைப்*
*பாளையில*
*தான் பிறந்தான்!*
*இப்போது இங்கை பம்பலப்பிட்டிப் பெருவளவுடையான்*
*தப்பாது பெருங்கோயில் மதிலுடனும் தானுடையான்*
*மூலஸ்தானத்து முழுப்பாதுகாப்பும் மிக்குடையான்*
*ஆனாலும் என்பிள்ளை இப்போதும் பயந்து விட்டான்*
*சமாதானப் பூதமொன்றுக்குப் பலியாக்கி விடுவரெனப்*
*பயந்து விட்டானென பிள்ளையவனிப்போ*
*தன் சொந்த இடம்விட்டும்*
*மீண்டும் தென்னம் பிள்ளையின்*
*வட்டுப் பாளைக்குள் பதுங்கிவிட்டான் என்பிள்ளை!*
*ஐயகோ என்பிள்ளை*
*என் பிள்ளையார் பாவம்*
*தும்பிக்கையான் துணையெனச்*
*சொல்லாதீர் விட்டுவிடும்!*

*புதியபூமி -ஏப்ரல் 2002*

6

# அம்மா

*அம்மா! அம்மா!*
*சொல்லாமல் கொள்ளாமல் போனாயோ! அம்மா!*
*கொள்ளை நோய்*
*கொண்டு போனதோ! அம்மா!*

*வைரஸ் காச்சல் வந்தால்*
*வாழ முடியாது*
*வைத்தியம் எதுவும்*
*பண்ண முடியாது*
*வைத்தியசாலைக்கும் தெரியாது*
*வைத்தியருக்கும் புரியாது!*
*யாரும் புவியில் வருத்தம் வந்தால்*
*வாழ்வின் கதையது முடிவாகும்!*

*இந்த நுளம்பு எங்கிருந்து வந்தது!*
*காட்டிலிருந்து வந்ததா,*
*வெளி நாட்டிலிருந்து வந்ததா?*
*எங்கள் வீட்டில் விளைந்த*
*புதுமை என்ன?*

*சேட்டைவிட்டது யாரென்று*
*தர்மராஜன் யமனை*
*கேட்டும் தெரியவில்லை!*
*எதுவும் புரியவில்லை?*
*சத்தியவானை மீட்ட*
*சாவித்திரிபோல்- அம்மா*
*நான் உங்களை மீட்பேன்!*
*யமனின் வேடத்தில்*
*பலபேர்கள் உலவுவதால்*
*அடையாளம் தெரியவில்லை!*
*எல்லாம் கோட்டை விட்டோம்*
*என்று எண்ணியோ அம்மா*
*உன் அடையாளம் தேடிச் சென்றாய்*
*உயர் பாதுகாப்பு வலயத்தில்*

*உடல் உலவ முடியாது என்பதனால்தானோ*
*உயிர் பிரிந்தாய் உடலை விட்டாய்!*
*உடற் பிணத்தைக் காவி*
*பலாலி போக முடியாதென்றோ*
*ஆவியுடன் பறந்து போனீரம்மா?*
*ஆர் தடுக்க உனை வருவார் இனி,*
*பலாலியில் எங்கள் வளவு எப்படி இருக்குதம்மா?*

*வீடு கிணறு தோட்டம் யாவும்*
*தேடுவாரற்றுக் கிடக்குதென்றோ*
*ஓடி உழைக்கச் சென்றாயோ*
*வேலி படலை கட்டாமல் வந்தம்!*
*கதியால் வேலிக் கறையான்*
*தட்டுறியோ அம்மா!*
*வாழையள் குட்டி போட்டதோ அம்மா!*

*அமெரிக்காவுக்கு வான்வெளிதானாம்*
*எம்கடலும் நிலமும் அந்நியர்க்குத் தானாம்?*
*இவ்வாறென்பதால்,*
*எங்கள் வளவு காக்கப் போனாயோ தாயே?*
*ஆவியானதால் அம்மா உன்*
*அடையாளம் அவர்க்குத் தெரியாது*
*பாடைகள் நடுங்கப் பவனி வருவாய்*
*தொடைகள் நடுங்கத் தொலைத்து எழுவாய்*
*பலாலி வான்வெளியில் எரி தழலாய் விரிவாய்*
*எல்லோரும் அவ்வெளியில்*
*புத்தம் புதுக் கவிதை நாம் படிப்போம் வா அம்மா!*

❍

*7*

## உச்சி மீது

*1*

*உச்சி மோந்து அன்பு குழைய அம்மா வேணும்*
*உச்சி பிரித்து தலைசீவிவாரிவிட அம்மா வேணும்*
*உச்சி பிசைந்து எண்ணெய் தடவி- உடம்பின்*
*ஊத்தை உருட்ட அப்பா வேணும்*

*ஆருக்கும் பயமின்றி தெருவோரம் நடக்கத் தம்பியர் வேணும்*
*உள்ளங்கால் முதல் உச்சந்தலைவரை*
*உடற்பயிற்சி செய்ய நண்பர்கள் ஒன்றுசேர வேணும்*

*ஆர் எவர் வந்து வாளெடுத்து ஆட்கள் சூழ்ந்து- தம்*
*பேர் சிறக்க 'ஆவா' என்று அடிபடுவோன்*
*தலை சீவத் தோழர் வேணும்*

*வீரம், துணிவு, நம்பிக்கை, நிச்சயம் என்றுணர் என்*
*அண்ணன் எனக்கு வேணும்*
*அக்கா என்னோடு அழைத்து பக்கத்திலிருந்து*
*பாடியாட எக்காலமும் என் அக்கா வேணும்*

*தங்கைச்சி என்னருகில் தக்கபடி விளையாடிய*
*என் தங்கைச்சி வேணும்*
*பேய், பிசாசு, பூதக்கதைகள் சொல்ல பேரன், பேத்தி வேணும்*

*2*

*எங்களுக்கெல்லாம் மரம்நாட்டி தண்ணீர் ஊற்றி*
*பொங்கும் பூமிகுளிரத் தண்ணீர் பாய்ச்சி பொலிவுறு*
*எந்தையும் தாயும் எங்களுடன் இங்கு வாழவேணும்*
*பிள்ளைகள் மரணச் சடங்கை நல்லாய்ச் செய்யத் தயாராகுங்கள்*
*என்றது ஐ.நா.*
*இன்றோ நாங்கள்*
*ஐயோ, இது பொறுக்குமோ?*
*நெஞ்சு பொறுக்குதில்லையே!*

*3*

*குடும்பம் குலைந்தது குழந்தைகள் குழம்பின*
*நுகர்வுச் சுய இன்ப அடுப்பில் எரிந்தது அன்பு*
*சுருக்கிட்டுச் செத்தது கருணை*
*உலக மயத்தில் உருக்குலைந்து சிதைந்தது உண்மை*
*பண விஷத்தில் நீலம் பாரிச்சது பாசம்*
*வட்டியிலும் வங்கியிலும் உறவின் கருச் சிதைவு*
*பயத்திலும் சந்தேகத்திலும் பலியானது அயல் எனும் உறவு*
*வெள்ளையிலும், கொழுப்பிலும், தசையிலும் அழுகியது அழகு*
*கோபுரப் பளிங்கு ஆலயத்தில் கழுவேறியது நன்மை*

*அடியும் முடியும் தேடிய கைகளால்*
*மண்ணடியில் பள்ளத்தில் மடிந்தவர் கணக்கில்*
*விண் முடி தேடிச் சென்று புனிதங்கள் உடைத்து*
*உச்சி வெய்யிலில் உடல் வேர்வை வழிந்து சோர்வை வெல்லும்*
*உழைப்பாளரின் உச்சியில் முடியேறும் போது*
*மானிடப் பிடி வெல்லும் என்றால்*
*பூரண பொருள்முதல் வாதி அச்சமற்றவன்*

*4*

*அமெரிக்க குஞ்சம் கட்டிப் பட்டம் விட்டுப்*
*பறந்தது உலகாளும் கழுகு!*
*உயரத் தொங்கும்படி கேட்ட அமெரிக்கம்*
*வாலறுந்த பட்டமாய் தொங்கியது குற்றுயிராய்*
*சர்வதேச அரங்கில்*
*அறுநூற்று முப்பத்தெட்டு கொலை முயற்சிப் பட்டங்கள் பறக்கவிட்டு*
*கொட்டமறுந்து முனகியது சி. ஐ. ஏ!*

*ஈழத்தின் உச்சியில் கூடுகட்ட குந்திய இந்தியக் குஞ்சு*
*பாதாளம் நோக்கி படுகுழியில் வீழும்*
*ஈழம் மீளும்*
*தாளும் உலகு*
*மீளமீள வெல்லும்*
*ஈழம் மறுபடியும்.*

❍

*8*

# தாங்குமோ இத்தரணி

*ஆச்சியாணை அப்புவாணை*
*இஞ்சை பாருங்கோ*
*ஊர் படும் பாட்டைக் கொஞ்சஞ்*
*சொல்லக் கேளுங்கோ*

*மந்திரவித்தை தந்திர வித்தை*
*மாயமால ஜாலவித்தை*
*பேய் பெல்லி சூனியம்*
*கூடன் மாடன் கொள்ளிவால் பிசாசு*
*கூனி சகுனி துச்சாதனன்*
*கூடி வந்து நிக்கினம்*
*சீலை துணி உரியினம்*
*சூது ஆடி துலையிறம்*
*நாடும் போச்சு வீடும் போச்சு*
*பெண்டுபிள்ளை எல்லாம் போச்சு*
*தனிச்சுப்போனம்*
*சாதி சனம் பிரியுது சந்ததிகள் பெருகுது*
*ஊரும் பிரியுது*
*உறவும் சிரிக்குது*

*ஊரும் பிரியுது உறவும் பிரியுது*
*பிரியுது பிரியுது எல்லாம்*
*பிரிஞ்சு உரியுது*
*உருகுது பெருகுது திருகுது- தமிழ்ப்*
*பிரியம் பெருகி பிரிவம் எண்டம்*
*சபதம் போட்டம் சன்னதம் கொண்டம்*
*மொழியைப் பிரிஞ்சம் பிரிஞ்சம்*
*டொச்சும் இங்கிலிசும் பிரியமானம்*
*தமிழை மறந்தம் சஞ்சலப்பட்டம்*

*காற்றும் மூச்சும் நெருப்பும் நீரும்*
*மண்ணும் குழைந்து கலந்த மா மனிதர்*
*காற்றுக்கு காசு லஞ்சம் குடுத்து*
*நீருக்கும் நெருப்புக்கும்*
*ஊனுக்கும் மண்ணுக்கும்*
*விலங்குகளிட்டு*
*பஞ்ச பூதங்களை*
*மண்டியிட வைத்தோம்*
*தாங்குமோ இத்தரணி?*

*9*

## அப்பு

*எல்லாம் நேற்றுப் போல்தான் இருக்கிறது*
*சொல்லாமல் கொள்ளாமல் போனாரோ*
*அப்பு!*
*நல்லாய்த்தானே இருந்தார் நான் பார்க்கையில்*
*எல்லாம் முடிஞ்சுது ஐயோ, இனி*
*என்ன?*
*மெல்லமாய் வந்து பக்கத்திருந்து*
*கள்ளமாய்த் திரும்பிப் பார்த்து மெலிதாய்*
*"தம்பி,*
*சொல்லு, வன்னியசிங்கத்துக்கு நாங்களெல்லாம்*
*நல்லபடி இஞ்சை இருக்கிறம்*
*எண்டு!*
*தாய்க்காரி சொல்லுறதுகளைத் தட்டிக் கழிச்சு*
*வாய்க்கு வந்தபடி அவ கதைக்கிறதைக் கொஞ்சம் குறைச்சுச்*
*சொல்லு,*
*ஆக்கினை இஞ்சையேதுமில்லை அயலார் நல்லாய்ப்*
*பாக்கினை, பிறகென்ன பிரச்சினை எல்லாம்*
*சரி"*
*வாய்க்கரிசி போட இஞ்சை எனக்காரெண்டு*
*நோக்காரர்  போல ஒருநாளும் தானாய்ச் சொன்னதும்*
*இல்லை?*
*பாய்க்குப் பாரமாய் படுத்துமவரிருக்கவில்லை*
*வாய்க்கு வந்தபடி வார்த்தையில் முணுமுணுப்பேதும் இல்லை!*

*கொக்குவிலில் குச்சொழுங்கைத் தொங்கற் குடிலில்*
*அக்காலத்தில் வாழ்ந்ததுவும் அப்போதும் என்ன,*
*பக்குவமாய்த் தொழிலாளியாய் சுருட்டுச் சுற்றிப்*
*பொக்குவாய் கிழவரெல்லாம் பல்லிளித்து மகிழ,*
*எக்காலத்தும் இன்றபுற்றிருக்க எல்லோர்க்குமாய்*
*மாக்ஸீய வழி மைந்தனாய்த் திகழ*

*தாக்குண்டு தமிழர் தரமிழந்து நோக வெறும்*
*போக்கோடு உலகெங்கும் பிறர் எம்மை இகழ*
*வாக்கோடு வளமொன்று உளமாரவேண்டித் தன்மான*
*நோக்கோடு தரணியெங்கும் தக்கபடி மாற,*
*ஊக்கமாய் உழைக்குமெங்கள் தோழர்*
*ஆக்கப் பணியோடு உலகமெலாம் தழைக்க,*

*வாய்ப்பளித்த அப்பு, நீங்கள் தமிழகத்தில்*
*நோய் கண்டு நொடிந்தீரோ*
*தேக,*
*ஆரோக்கியமழிந்தாலும் உங்கள்*
*ஆழ்மனவுறுதியோடு நீங்கள்*
*அன்று*
*ஒக்ரோபர் தொண்ணூற்று ஐந்தில்*
*எக்கேடு கெட்டாலும்*
*கிடவென்று*
*எல்லோரும் விட்டோடும் யாழ்ப்பாணத்தில்*
*வல்லோரும் வழி தவறிய நாளொன்றில்*
*உறவென்று*
*உங்களைச் சிலநாளில் நான் கண்டதுவும்*
*பங்கமின்றிப் படுத்திருந்தும் பாயில்*
*விறுக்கென்று*
*"தங்குமிடமிதுவே யென் மண்ணும் ஊரும்*
*எங்குமினிச் செல்லேன்" என்றீர் எங்கள்*
*அப்பு"*
*பொங்குமெங்கள் உள்ளமெலாம்*
*எங்குமாய் நிற்பீர்கள் அப்பு, எங்களோடு நிறைந்து"..*

*10*

# சிறி லங்கா

*வாருங்கோ, வாருங்கோ, ஓடி வாருங்கோ*
*மந்திரமுமில்லை தந்திரமுமில்லை*

*ஆத்திலை போட்டால் குளத்திலை விளையும்*
*சேச்சிலை செத்தால் ராஜ'ய சபாவில் மிதக்கும்*
*இசுலாமிய இராச்சியம் எண்டால்*
*இந்துத்துவா இராச்சியம் உதிக்கும்*

*வாருங்கோ, வாருங்கோ, ஓடி வாருங்கோ*
*மந்திரமுமில்லை தந்திரமுமில்லை*

*மந்திரிமாரை கலைக்கலாம்*
*சனாதிபதியை மடக்கலாம்*
*பாராளுமன்றை முடக்கலாம்*
*நீதிமன்றை நித்திரையாக்கலாம்*
*அவசரகாலச் சட்டத்தை அனாதையாக்கலாம்*
*சட்ட ஆட்சியை சுட்டுத்தள்ளலாம்*
*படையணிகளை பல்லிளிக்கப்பண்ணலாம்*
*சட்டத்தையும் நீதியையும்*
*சவப்பெட்டிக்குள் மூடலாம்*

*வாருங்கோ, வாருங்கோ, ஓடி வாருங்கோ*
*மந்திரமுமில்லை தந்திரமுமில்லை*

*சாமானை மறைச்சு மஞ்சள் காவி போட்டு*
*அரச மரநிழல் அவசியமில்லை*
*கண்டிக் குளிரிலை தலதா முத்தத்திலை*

*சாப்பிடேல்லையெண்டு சொல்லி தண்ணி குடிச்சு*
*சப்பாணி கொட்டிடலாம் கொஞ்சம் லேசாய் சரிஞ்சும் படுக்கலாம்*
*மட்டக்களப்பிலை ஒருத்தர் சாப்பிடாமல் இருப்பார்*
*யாழ்ப்பாணத்திலை ஒரு காவி சன்னதங் கொள்ளும்*
*வெலிக்கடைச் சாடியிலை பூதத்தை அவிழ்க்க சனாதிபதி உள்ளார்*
*பூதம் கிளம்பும், புழுதி பறக்கும்*
*சிரிலங்காச் சிங்கள பவுத்தக் குடியரசு தோன்றும்*
*சிரிப்போம் சீரியசாய்*
*வாழுக வாழுகவே*
*சிரிலங்காப் பிரசையாய்ச் சகலதுமே*
*பல்லாண்டு, பல்லாண்டு ஆளுகவே*
*எல்லோரும் மரிக்க!*

*வாருங்கோ, வாருங்கோ ஓடிவாருங்கோ*
*மந்திரமுமில்லை தந்திரமுமில்லை*

*புதியபூமி யூலை- ஆகஸ்ட் 2019*

○

//

# இழப்பு

*யார் இது?*
*கதவு தட்டுது படலை திறக்குது*
*பார்ஷல் வருகிது ரொவிகள் பரவுது*
*வாய் திறக்குது வளவளவென்கிது*
*பாயுது சுவரில ஏறுது*
*வண்ண வடிவங்களைத் தாவி ஒட்டுது*
*வாளத் தெரிய வேணுமெண்டு பல சங்கதி சொல்லுது*

*தாளந் தப்பி தலைகரணமாய் வாழுறம் என்று*
*உலகெலாம் உணர்ந்தோர் ஓதுவார் என்று*
*சூழுது பாவம் பழியெலாம் என்று*
*அழுது வடியுது ஆவியும் பறக்கிது*
*வழுவாதுலகில் வாழுதல் என்பது பிறர்*
*புழுகுமாறு வீடு கார் ஆளணியென்றும்*
*தொழுதிடத் தொட்டாட்டுக் காரரென்று*
*பழுதின்றி நூற்றுவரைப் பக்கத்தில் வைத்திருக்கும்*
*முழுமுதலாளியாய் பிறர் திகைக்க*
*உழுதுழைக்காது வாழும் யோகமே*
*ஞாலத்தின் தக்கதொரு ஞானமென்றும்*
*பிறர் வாடப் பல செயல்கள் செய்வதுவே யாகமென்றும்*
*போதம் புதிதுரைக்கும் பூகோளமயமாகும்*
*வாயளவு வயிற்றளவு உடலழகு பெருத்து*
*உளவளத் துரத்தி சிந்தனை துறந்து*
*நுகர்தல் ஒன்றே நித்தியமாகும் நீதியைச் சாற்றிப்*
*பகர்தலொன்றே தம் கடன் போற்றும்*
*யார் இது?*

*பதினைந்து வருடங்கள் வெளிநாடு பாய்ந்தோடி*
*புதுவருடச் சமாதானங் கண்டிங்கு தான்தேடி*
*வந்தது என் மகன்! வேறல்ல!*

◐

*12*

## மரங்களின் கனி: சங்கர்

*விதிகள் ஏனோ சிலவேளைகளில்*
*விளங்காத புதிராகி*
*சதியோ இது எனக்*
*கதி கலங்க வைக்கிறது*

*ஆற்றலும் அறிவும்*
*அனைவரையும் அணைத்தியங்கும் பண்பும்*
*வாய்த்த சங்கரை*
*ஏய்த்து*
*ஏரியில் இழுத்து*
*மாய்த்த து விதியல்ல*
*காலன் செய்த சதியே*
*கணப்பொழுதில் நிகழ்ந்த சதியில்*
*எமது கனவுகளும் சேர்ந்து அழிந்ததை*
*அறிவானோ காலன்*

*வலது கையை வெட்டி*
*வா சண்டைக்கு இனி என*
*எதிரி அழைத்தது போல*
*உன் இழப்பு எங்களுக்கு*

*துன்பங்களை துணிவோடும்*
*இன்பங்களை பணிவோடும்*
*தன்னிலை தவறா கண்ணியத்தோடு*
*உன்னால் ஏற்க இயலும் ஆனதால்*
*சித்தனோ அன்றில் புத்தனோ நீ என*
*மற்றோரை வியக்க வைத்தாய்*

*உற்றார் உறவினர்களுக்கு அப்பால்- நலிந்த*
*மற்றோர் உயர்விற்காய்*
*எப்போதும் எழுகின்ற உன்குரலை*
*தண்ணீர் வந்து தடுத்ததோ என*

*கண்ணீரில் தோழர்கள்*
*கனத்த இதயத்தோடு*

*வென்ற வரலாறே மன்ற வரலாறு*
*என்ற உறுதியை நெஞ்சில் நிறுத்தி*
*மீண்டும் எழுவோம் மிடுக்கோடு என*
*துவண்டு கிடந்தவரை*
*தூண்டி எழுப்பி*
*இணைத்து ஓர் இயக்கமாக்கி*
*பயணத்தை துவக்கி வைத்தாய்*
*இப்போ*
*பாதியில் எம்மை விட்டாய்*
*நீதியோ*

*இனி ஒரு விதிசெய்வோம்*
*ஐயோ என இனி அழுவதும் வேண்டாம்*
*இல்லையே நீ என ஓய்வதும் வேண்டாம்*
*பாதியில் நிற்கும் பயணத்தின்*
*மீதியைத் தொடர்வோம் துணிவோடு*

*கனவுகள் ஒரு நாள் நிறைவுறும்*
*காட்சிகள் எல்லாம் மாறிடும்*
*நலிந்தவர் வாழ்வு உயர்ந்திடும்*
*நம் ஊர் கண்டு உலகு வியந்திடும்*
*அப்போது*
*நிற்பாய் நீ அங்கே*

*எந்தையும் தாயும் குலவி மகிழ்ந்த*
*மண்ணில் உரமாக*
*மண்டபங்களில் கல்லாக*
*மரங்களில் கனியாக*
*மலர்களில் இதழாக*
*மீண்டும் மீண்டும்*
*பிறப்போம்*
*என்றும் அழியாமல்.*

13

## மறப்பாவும் மறதிப்பாவும்

*மௌனமாய்ப்போ! தேவையெனில் வசதியாய் மறந்துபோ!*
*புத்தரும் காந்தியும் யேசுவும் வள்ளுவரும்*
*சித்தரும் மொத்தமாய் ஒன்றாய்*
*செத்திடும்படி யாழ்- நூலக*
*சத்திய சோதனையோடு பைபிளும்*
*குறளும் தம்மபோதமும் குர்ஆனுமொன்றாய்*
*கொழுத்திய குண்டரின் தொண்டினை*
*தமிழா நீ! தமிழின் பேராலே*
*வசதியாய் மறந்துபோ! மௌனித்துவிடு நீ!*
*எண்பத்து மூன்றில் தமிழரிலன்பு*
*பூண்ட சிங்களத் தேசிய எழுச்சியில்*
*கூண்டோடு கைலாசம் அனுப்பி*
*மீண்டெமை இரட்சித்த ஆண்டவரே!*
*தும்பிக்கையான் துணையெனில் பழைய பல்லவியை*
*தோண்டாமல் ஒன்றாய் மோட்சம் காண்பதற்காய்*
*தமிழா நீ! தமிழின் பேராலே*
*வசதியாய் மறந்து போ! மௌனித்துவிடு நீ!*
*வெலிக்கடைச் சிறையில் ஐம்பத்திருவரை*
*பலியாக்கிய எண்பத்து மூன்று பற்றியொரு*
*காலங்கடந்தும் விசாரணையில்லை பரவாயில்லை- உறவுப்*
*பாலமமைத்துப் பயணம் செய்வதற்காய்*
*தமிழா நீ! இன்தமிழின் பேராலே*
*வசதியாய் மறந்து விடு! மௌனித்து விடு!*
*ஊரிழந்தோம் உறவிழந்தோம் வீடிழந்தோம்*
*நாடிழந்தோம் நடுத்தெரு நாரணராய்*
*கோவிந்தா போடுகிறோம்- எனினும்*
*கூடுகிறோம் பேசுகிறோம் குதூகலித்திடுகிறோம்*
*கெடுக்காதீரதை!*
*போராயின் போரென்றும்*
*சமாதானமாயின் சமாதானமென்றும்*
*புதுக்கீதையுரைத்த ஜே. ஆரின் பேரனார்*
*சாற்றுகிறார் சமாதானம் என்றேதான்*
*மறந்திடுவோமா? மௌனித்திடுவோமா?*

*14*

# நானும் பொம்மை நீயும் பொம்மை

*நான் தான் நீ, நீ தான் நான்*
*அவர்தான் நான் அவர்தான் நீ*
*தான்தான் நீ, தான்தான் நான்*
*தத்தீம் தோம்! தகதீம் தோம்!*

*நான்தான் அவர், அவர்தான் நான்*
*என் கண் உன் கண் அவர்கண் எம்மண்*
*உன் மண் என் மண் அவர்கள் தம்மண்*
*கண் மண் தகதோம் எம்மண் தித்தோம்*

*என் குரல் அவர் குரல் எம்குரல் பிறர்குரல்*
*என் குரல் அவர் குரல் எம்தரல் பிறர்தரல்*
*உன் குரல் என் குரல் எம்குரல் உம்குரல்*
*எம் நிரல் அவர் நிரல் எல்லாம் அரகர!!*

*புதியபூமி- மே 2002*

*15*

# உலகப்பாவும் அரசியல்பாவும்

*உஷ் - மௌனம்*
*ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்*
*சீரிலங்கை கூறுபட்டால் யாரிங்கு கூத்தாடி?*
*வேரறுந்து வெளிநாடெலாம் தேடி சீரழிந்து மொழி மறந்து*
*பாரெங்கும் பரதேசிகளாய்*
*ஐரோப்பிய வெள்ளைத் தோல்களுக்கடிபணிந்து*
*தூசி, புளுதியிலாத் தேசத்தில்*
*கொசுக்களும் ஈக்களுமில்லா குளிர்நாட்டில்*
*போயிருக்கும் புலம்பெயர் தமிழர்களே*
*ஊர் இரண்டுபட உதவாதீரே!*
*உஷ்- மௌனம்*
*புஷ்- கவனம்*

*அரசியல் என்பது விஞ்ஞானம்*
*தெரியாதார் பேசாதிருப்பது நலம்*
*புரியாத பத்திரிகை ஊடகப் புளுகுகளை*
*அரிதான உண்மையென அன்றாடம் ஏற்பதும்*
*ஏன் எதற்கு எப்படியென்ற சான்றுகளின்றி*
*சன்னதமாடி கண்டபடி பேசிக்காறித்துப்புவதும்*
*தான் தோன்றித் தனமாய் தலைவரெலாம்*
*தம்பாட்டில் உளறுவதும் காசும் அரசியலும்*
*கலப்படமாய்ப் போனதனால்*
*ஊரும் உலகும் உருவழிந்து போனதையோ!*

*முஸ்லீம்- மலையகம்- தமிழர் என*
*ஒடுக்கப்பட்டோர் இனம் மூன்று- தம்முள்*
*வடுக்கிளறிக் கொடுக்கிழுக்காது- தாம்*
*படுகின்ற துயரெலாம் பகிர்ந்து- நாம்*
*நடுகின்ற இனஉறவுப் பயிர்வளர்த்து*
*எடுக்கின்ற அரசியல் தீர்வின் முடிவில்*
*தொடுக்கின்ற போர் வெற்றி பெறும்*
*-உறுதி திண்ணம்! திண்ணம்!*

*புதிய பூமி - டிசம்பர் 2002*

*16*

# வாழ்வின் சாரம்

*ஏது நடந்ததோ அது அநியாயமாகவே நடந்தது*
*ஏனெனில் உலகை நடத்தியது ஆண்ட கருத்தியல்*
*ஏது நடக்கிறதோ அது அநியாயமாகவே நடக்கிறது*
*ஏனெனில் உலகை நடத்துவது ஆண்ட பரம்பரை*
*ஏது நடக்க இருக்கிறதோ அதுவும் அநியாயமாகவே நடக்கும்*
*ஏனெனில் உழைப்பாளியாகிய நீ அக்கறையற்றிருக்கிறாய்*
*உன்னுடைய சிந்தனையை இழந்தாய் அதற்காக நீ அழுகிறாய்*
*உலகம் உன்னை உருவாக்கியது அதனை நீ இழக்கலாமா?*
*புதிய உலகை நீ படைப்பாய் அதை வீணாக்குவாயா?*
*உலகு எல்லோருக்குமென்பதால் அது உனக்குமானது*
*அதை எவரும் கொடுக்கவும் முடியாது வாங்கவும் முடியாது*
*அது இன்று உன்னுடையது நாளை மற்றொரு உழைப்பாளிக்குரியது*
*மற்றொருநாள் அது வேறொரு உழைப்பாளிக்குரியதாகிறது*
*எனவே உலகைக் காப்பது உனது வாழ்வாகிறது*
*"இதுவே உலக நியதியும் மக்கள் படைப்பின் சாரமும் ஆகும்"*

*புதியபூமி - மார்ச் 2004*

*17*

# என்.ஜி.ஓப் பெம்மானே!

*சொந்த மொழியில் சொந்த நாட்டில்*
*சொல்லமுடியாச் சோகத்தின்*
*அச்சத்தால் முடங்கியிருக்க*

*ஆங்கிலமே அகிலமென்று*
*அதுவேயெங்கள் போதனையென்று*
*அமெரிக்காவே அகிலமெலாம்*
*அருள்மொழிக் கடவுளென்று*
*புலம்பும் என்.ஜி.ஓப் போதகரே!*

*வெள்ளையர் வால் பிடித்து*
*வீழும் டொலருக்கும் பவுண்சுக்குமாய்*
*வாழும் என்.ஜி. ஓப் பெம்மானே எம்மானே*
*தாழும் சமுதாய நிலையே உன்வாழ்வாய்*
*ஊழும் வந்துறுத்தியதோ அம்மானே!*

*ஆளைவிட்டு அப்பாலே போம்!*

*தாயகம் ஏப்ரல்- ஜூலை 2009*

*18*

# வோட்டும் வீடும்

*வாக்குப்போட்டு வாக்குப்போட்டு*
*வாக்கிழந்தோம்*
*தாக்குப்பட்டுத் தாக்குப்பட்டு*
*தேக சுகமிழந்தோம்*

*நோய்ப்பட்டு நோய்ப்பட்டு*
*நொந்தழிந்து போனோம்*
*வாய்விட்டழுதழுது*
*வாழ்விழந்து போனோம்*

*கவலைப்பட்டுக் கவலைப்பட்டு*
*லயத்துக் குந்திலே நானுறங்க,*
*தேனிசைக் குரலிலே மீனாட்சியம்மையின்*
*பாட்டுக் கேட்குதே காது இனிக்கவே*

*'சட்டங்கள் இருக்குது ஏட்டிலே எங்கள்*
*சக்தி பிறக்குது பாட்டிலே'*
*நடேசையரும் சி.வி.யும் கதைத்தபடி*
*கைலாசும் கைகுலுக்கிச் சிரித்தபடி*
*உல்லாசமாய் விருந்துக்கு*
*வருகிறார் கைவீசுக்கி- என்*
*தோட்டத்து வீட்டு முற்றத்துக்கே*

*உத்துப் பார்க்கிறேன் உண்மையிலே நடக்குது*
*தோற்றவர் தொழிலாளர் எனுங் காலங்கடந்து*
*ஆற்றலவர் உழைப்பிலே ஆட்சி நடக்குது மலைநாட்டிலே*

*ஆரார்க்கோ வாக்கிட்டு*
*ஆய்க்கினைகள் நாம் பட்டோம்*
*நாமார்க்கும் நம்மிறைமை யிழக்காது*
*நமை நாமேயாளும் முறை தெளிந்திட்டோம்*

*வேற்றரசார் விதித்திட்ட பிரதிநிதித்துவப் பிசாசுகளின்*
*விலங்குடைத்தோம் விடுபட்டோம்*

*தாயகம் ஏப்ரல்-யூன் 2015*

19

## கரங்கள் உயரும்

*வெலிக்கடை வெஞ்சிறையில் வருடங்கள் இரண்டு*

*வெலிக்கடை வெஞ்சிறையில் வாழும் நம் தோழர்*
*பலிக்கடாக்களாய் பரிதவிக்கின்றார்*
*மலையக மண்ணை தலையில் சுமந்தார்*
*விலை போகாத வீரமிகு தோழர்!*

*(வெலிக்கடை)*

*வால்பிடிதோடி வளைய மறுத்தார்*
*கால் கை பிடிக்கும் அவலத்தை வெறுத்தார்*
*மேல்கொத்மலையைத் தம் மேலில் சுமந்தார்*
*ஆல்போல் வாழ்வார் ஆற்றல்மிகு தோழர்*

*(வெலிக்கடை)*

*கல்வாத்து ஏந்தும் கரங்கள் உயரும்*
*பம்பாத்தரசியல் தலைகள் தாழும்*
*இம்மாத்திரத்தில் உலகம் மாறும்*
*இதுவே வர்க்க விடுதலை ஆகும்*

*(வெலிக்கடை)*

*தாயகம் ஜனவரி-மார்ச் 2009*

*20*

# ஆளுமை

*அடுத்தவர் தயவில்*
*பிழைப்பவர் என்போர் பேயர்*
*கெடுத்தவர் பயத்தில் ஆயுளை*
*இழுப்போர் அடிமையர்*
*அடுத்துக் கெடுத்தார்தமை*
*பக்தியுடன் பாடிப்பரவுவோர் பாவியர்*
*எடுத்த வில் தொடுத்து*
*கணைகளை வீசுவார் வீரர்*

*பேயராய் அடிமையாய்*
*பாவிகளாய் போனோம்*
*மேய்ப்போர் புராணம்*
*பாராயணம் பண்ணுதலே*
*ஊழியமாய்ப் போனோம்*
*வாய்ப்பான் பிழைப்பான்*
*வாழ்க்கையாய் ஆனோம்*
*ஏய்ப்பானே வாழ்வான்*
*என்றேமாந்தே பொறுத்தோம்*
*வீரராய் வீழ்வோமென ஓயாது*
*சொல்லித் தொலைந்தே போனோம்*

*ஆரெவர்க்கும் அடிபணியா*
*மனிசராய் எப்போ தெழுவோம்*
*ஆளுமை மிக்கவோர் மானுடராய் எப்போ தழைப்போம்?*

*ஆளுமை யென்பது அவரவர்*
*ஆற்றல்களின் வெளிப்பாடென்பேன்*
*விருப்புகள் வெளிப்படும்*
*வெறுப்புகள் வெளிக்காட்டும்*
*வினாக்கள் தொடுக்கும்*
*விடைகள் தேடும்*
*கனாக்கள் காணும்*
*காரியம் சித்தி ஆகும்*
*உழைப்பர் உண்பர்*
*ஊரார்கெலாம் கொடுப்பர்*
*ஆளுமை இவையென்பேன்- அவரவர்*
*ஆற்றல்கள் அதுவென்பேன்*

*தாயகம், ஏப்ரல்-ஜூன் 2005*

21

# விழிப்பே எங்கள் உலகு

*ஊரெலாம் கூடும்*
*ஒரு முடிவு செய்குவோம்*
*பாரெலாம் பாடுவோம்*
*மனிசரை மீட்போம்*
*மனிசரைப் பிடித்த பேயெலாம் ஓட*
*வேப்பிலை அடிப்போம்*
*விளக்கினைப்பிடிப்போம்*
*ஆர்ப்பரித் தெழுவோம்*
*ஆக்கினை செய்வோரைக்*
*காதில் பிடிப்போம்- கலைத்தே விடுவோம்*

*கொலனித்துவம் குலைநடுங்கும்*
*மறு கொலனித்துவம் மண்டையைப் போடும்*
*புதுவார்ப்பாய் மக்கள் நாம் மாறுவோம்*
*உலகெலாம் தொழுதேற்ற*
*மக்களெலாம் விழிப்போம்*
*ஆளுமை பெறுவோம்*
*ஆழமாய் வேர்விடுவோம்*
*அகிலமெலாம் படர்வோம்*

*கொலனித்துவம் இறந்தகாலமெனில்*
*நிகழ்காலம் மறுகொலனித்துவமே*
*எதிர்காலம் எமக்காயின்*
*கடவுள் வேடமிட்ட பேய்கள் ஒழியும்*
*சர்வ தேசியம் மலரும்*
*சகலமும் மக்கள் வசமாகும்*
*ஓம்*
*விடியலின் பாதை தெரிகிறது*
*விழிப்பே எங்கள் உலகாகிறது*

*தாயகம் ஏப்ரல்- ஜூன் 2005*

*22*

# மறுபடி

*செப்ரம்பர் பதினொன்று!*
*அமெரிக்கப் பெருநகர் மாடிகள் சரிந்தன!*
*பாறி விழுந்தன பார் முழுதும்!*
*ஆய்க்கினை பண்ணுகிறேன் பார்!- என்றார்*
*ஊர் எலாம் உலகெலாம் ஒன்றாய்க்கூடி*
*வேர்விட்டு நாகரிக விழுதூன்றி நின்ற*
*ஆப்கானிஸ்தான்! அதன்மீது ஐயகோ!*
*ஆர்கேட்பாரின்றியும் ஆனமட்டும் மலையுடைத்து*
*வீரிட்டு மக்கள் புலம்பியழ*
*பீறிட்டு ரத்த ஆறு பெருகியோட*
*ஆர்வீட்டுச் சொத்தென்று*
*அமெரிக்கர் ஆர்ப்பரித்தார்! அபகரித்தார்!*

*வேறு,*

*இரணியன் என்ற சொல்*
*இஸ்ரேலுக்கு இனிப்பொருந்தும்*
*தரணியெங்கும் ஆளத் தப்புக்கணக்கோடு*
*பரணி பாடிப் பலஸ்தீனமதைப் பலி கொள்ளும்*
*இஸ்ரேலே இனி நீ மரண அடி பெறுவது*
*திண்ணம் திண்ணம் தித்தோம் தகதோம்*

*இன்னொன்று,*

*ஆஸ் என்றால் ஆங்கிலத்தில்*
*கழுதையென்றொரு கருத்து*
*அமெரிக்கத்து அனுமன்!*
*புலிக்கும் சிங்கத்துக்கும் சிக்கலென்றால்*
*கழுதை இங்கேன் கழுத்து நீட்டுகிறது?*

*குரங்கு இங்கேன் அப்பம் பங்கிட*
*ஆர்வம் காட்டுகுது?*
*ஆப்பிழுத்த குரங்கு ஆவதற்கு அவசரமோ?*
*போங்காணும் சும்மா?*

*பொழுதொன்று மாறும்- தருமம்*
*மறுபடி வெல்லும்*

*தாயகம் செப்டம்பர் 2002*

*23*

# அம்மா –2

*அம்மா*
*எங்கே நீ போனாய் அம்மா?*
*இனித் திரும்பி வரமாட்டாய் நீ!*
*படுக்கையில் வைத்துப் பால் தரமாட்டாய்*
*உடுப்புத் தோய்த்து உலர விடமாட்டாய்*
*அடுக்கி என் பொருட்களை*
*ஒழுங்காய் வைக்கமாட்டாய் நீ*
*தடுக்கி நான் விழுந்தாலும் தவிக்க நீ*
*இங்கில்லை!*

*எங்கே போனாய்*
*ஏன் போனாய்*
*எதற்காய் போனாய்*
*நான் உன் சுமையாய் இருப்பதே*
*உன் சுகமென்பாய்*
*எனவே என்னால் நீ போகவில்லை என்பதெல்லாம்*
*உண்மைதான்!*
*ஆனாலும் என் அழுகை ஓயவில்லை!*
*எங்கேதான் போனாலும் என்னுள்ளம்*
*எங்கேதான் உள்ளதென நானறியேன்*
*நீ போகையிலே நான் தேயிலைத் தோட்டத்தில்தான் இருந்தேன்*

*தேயிலைக் கொழுந்தெல்லாம்*
*இன்னுமேன் துளிர்க்கின்றன?*
*நான் பாதையிலே தள்ளுண்டு செல்கையிலே*
*ஏன்தான் பூக்களெல்லாம்*
*இன்னும் பூத்து எரிச்சலூட்டுகின்றன?*
*பள்ளிப் பிள்ளைகளெல்லாம்*
*பாய்ந்தோடிச் சிரித்து*
*என் கண்களெல்லாம் மொய்த்து*
*ஏன்தான் என்னை இன்னும்*
*காயப்படுத்துகின்றன!*

*மாமன், மச்சான், மருமக்கள் எல்லோரும் என்ற*
*என் உறவெல்லாம்*
*தம்பாட்டில் தங்கருமம் தக்கபடி செய்வதற்காய்*
*எங்கோ வெல்லாம் ஓடுகின்றனர்*
*ஏன்தான் இன்னு மெனைக் கொஞ்சிக்*
*கழுத்துக் குரல்வளையைக் கடித்துக் குதறிக்*
*கொல்லாமல் திரிகின்றார்!*
*பலரின் பாதங்களும் பதியும் படியாய்- நான்*
*செல்லாக் காசாய்க்*
*கிடக்கின்றேன்!*

*எங்கே எனைக் கண்டுபிடி அம்மா!*
*கள்ளன், பொலிசு விளையாட்டில்*
*துள்ளி நான் ஓடி ஒழித்தாலும்*
*கள்ளமாய் நீ என்னை காணாதவள் போல்*
*குசினி, தோட்டமெல்லாம் பார்ப்பது போல்*
*பார்த்துக் களைத்தாலும்*
*'ஆத்தாது' என்று சொல்ல நான்*
*உன் மடியிலே பாய்ந்து அணைத்து அளைந்தபடி*
*ஆனந்தமாய் வெற்றிக் களிப்பில்*
*கூத்தடித்தாலும்*
*தோற்றது நீயில்லை அம்மா!*

*எங்கே எனைக் கண்டுபிடி!*
*சொல்லுகிறேன் "கூ... கூ..."*
*"கூ... கூ..." என்ற என் குளறல்*
*மலையெல்லாம் தொட்டு*
*வானெல்லாம் பட்டு*
*உலகெங்குங் கேட்கிறது!*

*எங்கே எனைக் கண்டுபிடி*
*இம்முறை நீ தோற்பாய்!*

*24*

# பூமாதேவியே தாயே!!!

*பல்லவி*

*பூமா தேவியே தாயே- அம்மா*
*பூமா தேவியே*

*அனுபல்லவி*

*அலை கடலாக ஓய்வதறி யாமலே*
*கலை யெழில் பொங்க மகிழ்வினியோங்க*
*இன்பமே அம்மா*

*-பூமாதேவியே-*

*சரணம்*

*மலை முகில் நிலவில் அழகு தெறிக்குதே*
*மண் மரம் காட்டினில் கவலை மறக்குதே*
*மின்னல் முழக்கம் காற்றில் கலக்குதே*
*என் மன மகிழ்வில் எல்லாம் பறக்குதே*

*துக்கம் வெட்கம் பயத்தை மறக்கத் துணையாய்*
*எனக்கு வாய்த்தவளே!*
*அக்கம் பக்கம் ஆர் எவரெனிலுமெனை*
*அணைத்து அன்பு சொரிந்தவளே!*

*பேராசைமிகு உலகமயமென உனையே விழுங்கும்*
*கொடியவரை*
*நம்பி நீ அழிவதை நான் சகிக்கவோ*
*அவருடன் கூடி நீ களிக்கவோ*
*இது தகுமோ, இது முறையோ, இது தர்மம் தானோ!*
*எல்லை மீறிய மூலதன ஆசையில் நீயும் மயங்கவோ!*

*-பூமாதேவியே-*

*25*

# ஒழுங்கு

*ஆளுக்குப் பத்துப் பேர்*
*ஊருக்கு நூறு பேர்*
*ஆக நாம் அணிதிரண்டால்*
*அகிலம் நம் கைவசமே*
*-தன்ன னன்னா-*

*வாசிப்போம் வாசிப்போம்*
*புத்தகம்!*
*வீசிப்போம் வீசிப்போம்*
*அறியாமை*
*துக்கத்தின் காரணம்*
*அறியாமை – அதைத்*
*தூரத்தான் முசி எறிவோமே!*
*-ஆளுக்கு-*

*ஊரெல்லாம் ஓடி உழைக்கிறோம்*
*உலகெல்லாம் ஓடி உழைக்கிறோம்*
*ஓடி ஓடி உழைக்கிறோம்*
*துயரம் ஒன்றும் துலையேல்லை*
*மனிச அவலம் இன்னுந் தீரேல்லை*
*-ஆளுக்கு-*

*15.07.2004*

*26*

## விண்ணில் பறப்போம்

*பெண்ணே வா! பெண்ணே வா!*
*வெட்கத்தை விட்டெறி வெளியே வா!*
*துக்கத்தை விட்டெறி துணிந்து வா!*
*பயத்தை விட்டெறி பாய்ந்து வா!*
*-பெண்ணே-*

*கணவனை இழந்து கலங்காதே*
*பெண்ணே நீயெனப் பெருமைப்படு*
*மணவினை எண்ணி மயங்காதே*
*துணையே நீயெனத் துணிந்து விடு*
*-பெண்ணே-*

*மண்ணில் விளைவது பயிர்கள்*
*பெண்ணில் வளர்வது உயிர்கள்*
*கண்ணில் தெரியுது வானவெளி*
*விண்ணில் பறப்போம் பாய்ந்து வா!*
*-பெண்ணே-*

-

*27*

# எழுந்துவா

*சக்தி சக்தி சக்தி என்று பாடு*
*சந்நதம் எழுந்து நீயும் ஆடு*
*சொர்க்கம் சொர்க்கம் சொர்க்கம் என்று சொல்லு*
*உலகம் எங்கள் சொர்க்கமென்று வெல்லு*

*-சக்தி சக்தி சக்தி என்று பாடு-*

*நிலம் எங்கள் காலிலே*
*நீர் எங்கள் வேர்வையே!*
*நெருப்பு எங்கள் துணிவே*
*வெளி எங்கள் உடலே*
*காற்று எங்கள் மூச்சே!*

*-சக்தி சக்தி சக்தி என்று பாடு-*

*பஞ்ச பூதம் நாங்களே*
*பாரில் பஞ்சம் இல்லையே*
*அஞ்சும் மனிதம் இல்லையே*
*அகிலம் எங்கள் எல்லையே!*

*-சக்தி சக்தி சக்தி என்று பாடு-*

*28*

# வாழ்வதே எம் கனவு

*அன்புள்ள அம்மா வணக்கம்*
*ஆயினும்*
*இன்னும் ஏனிந்தச் சுணக்கம்*
*-அன்புள்ள-*

*ஆருயிர் தாயே- எனை*
*அள்ளியணைத் தாயே*
*ஆரினித் தாயே- எந்தன்*
*ஊர் பேரெலாம் நீயே*
*-அன்புள்ள-*

*பேர் பெறவே வளர்த்தாய்- நான்*
*பேரொளியாய் மலர்ந்தேன்*
*ஆரென்று நீயறியாய்*
*அவனோடு நானிணைந்தேன்*
*-அன்புள்ள-*

*உழைப்போருலகே அவனுலகு*
*ஏழை எளியோர் அவனுறவு*
*அன்பும் கருணையும் நிலைபெறவே*
*இன்பமாய் வாழ்வதே எம் கனவு!*
*-அன்புள்ள-*

*29*

# மனிசர் எங்கே!

*ஊரும் அழிஞ்சு போச்சே- எங்கள்*
*உறவும் பிரிஞ்சு போச்சே*
*வேரும் அறுந்து போச்சே- எங்கள்*
*விழுதுகளெங்கோ போச்சே!*

-ஊரும்-

*ஆரோ வாறார் ஆரோ போறார்*
*அறிஞ்சும் பயனில்லை*
*வாறார் போறார் போறார் வாறார்*
*வாசலும் தெரியேல்லே*

-ஊரும்-

*அன்பு எங்கே கருணை எங்கே*
*அதுவும் புரியேல்லை*
*இரக்கம் எங்கே மனிசர் எங்கே*
*இருந்தும் பயனென்ன?*

-ஊரும்-

*30*

# பூவே பூவிழந்தாயோ

*பூவே பூவிழந்தாயோ*
*மணமே மணமிழந்தாயோ*
*தேனே தேனிழந்தாயோ*
*சுவையே சுவையிழந்தாயோ*
*-பூவே பூவிழந்தாயோ-*

*சிரிப்பே சிரிப்பிழந்தாயோ*
*துணிவே துணிவிழந்தாயோ*
*மகிழ்வே மகிழ்விழந்தாயோ*
*மனமே மனமிழந்தாயோ*
*-பூவே பூவிழந்தாயோ-*

*வாழ்வே வாழ்விழந்தாயோ*
*காதலே காதலிழந்தாயோ*
*ஆணே ஆணாய் இல்லையோ*
*பெண்ணே பெண்ணாய் இல்லையோ*
*-பூவே பூவிழந்தாயோ-*

*அணைப்பே அணைப்பாய் இல்லையோ*
*பிள்ளையே இங்கினி இல்லையோ!*
*மானமே மானமாய் இல்லையோ!*
*மனிதரே மாநிலத்தின் தொல்லையோ!*
*-பூவே பூவிழந்தாயோ-*

*31*

# விடுதலை ஏன்!

*செய்த தவறென்ன தோழர்களே!*
*ஆண்டு ஒன்று போயினும்*
*மீண்டும்நீர் வருவீரெனக் காத்திருக்கிறோம்*
*வாசல் கதவுகளைத் திறந்து வைத்தபடி*

*கொலை செய்தீரோ, கொள்ளையடித்தீரோ,*
*பயங்கரவாதப் பண்ணிசைத்தீரோ?*
*நீவிர் செய்த தவறென்ன தோழர்களே*

*இலங்கை மணித்திருநாடு சிறக்கவென*
*சிங்களச் சோதரருடன் சிநேகம் கொண்டது தவறா!*

*நிலைமாற வேண்டுமெனில் மலையகத்து மாந்தர்தாம்*
*விழிபெற வேண்டுமென்றீர்*

*மேல்கொத்மலைத் திட்டத்தை எதிர்த்தீர்*
*திரண்டெழுந்தார் மக்களெல்லாம்*
*ஏனோ, நீர் சிறை சென்றீர்*


*உழைப்பாளர் உலகெலாம் ஒன்றாய்*
*உணர்ந்தோதி ஒன்றுபட வேண்டுமென்றீர்*
*எல்லா மக்களும் எல்லா இனத்தவரும்*
*எல்லா உலகமும் இன்பம் பெறவேண்டுமென்றீர்*
*இனிதாய் வாழ்வதையே இலக்கெனக் கொண்டீர்*

*இவையே நீர் செய்த குற்றமெனில்*
*விசாரணையேன் விடுதலையேன்*
*விலங்குடைக்க விரைவார்*
*இலங்கை மக்கள் விரைவாய்!*

*தாயகம் ஏப்ரல்- ஜுன் 2008*

# என்ர அப்பு
# என்ர அம்மா

கவிதைகள்



978-624-93177-3-4